தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் - வேளாண் பல்கலை முதன்மையர் பேச்சு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் 15-10-2015 (இன்று) இளைஞர் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது. மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு ஏபிஜே அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாள் நாடு முழுவதும் இளைஞர் எழுச்சி நாளாக அனுசரிக்க அரசு அறிவுறுத்தியுள்ளது. அதன்படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பாளர்களால் பேரணி நடத்தப்பட்டது. 300க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட மாணவ – மாணவியர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சுற்றுச்சூழலும் - அறிவியலும் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும், ஏவுகணை நாயகன் என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா அவர்கள், விழிப்புணர்வு பேரணியை துவங்கி வைத்தார். பேரணியை துவக்கி வைத்துப் பேசுகையில், முனைவர். அப்துல்கலாம் வேளாண்மை மற்றும் உணவுப் பதனிடுதல் துறைகளில் முன்னேற்றம் கண்டால் தான் இந்தியா முன்னேற முடியும் என்று நம்பினார். தூங்கும்போது வருவது கனவல்ல, எது நம்மைத் தூங்க விடாமல் செய்கிறதோ அதுவே கனவு என்று கூறியுள்ளார். நதி நீர் இணைப்பு, இரண்டாம் பசுமைப் புரட்சி போன்ற அவரின் கனவுகள் ஒவ்வொரு இளைஞரின் கனவாக மாறினால் அவர் விரும்பியது போல் 2020ல் இந்தியா வல்லரசாகும். இந்தியாவின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் தான் உள்ளது என்று கூறினார்.

பேரணியானது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ராபர்ட்சன் சாலை, பால் கம்பெனி, தடாகம் சாலை, லாலி சாலை வழியாக வந்து பல்கலைக்கழக வளாகத்தில்

நிறைவடைந்தது. பேரணியில் கலாமின் கனவுகள் மற்றும் கலாமின் பார்வையில் இளைஞர்களின் முன்னேற்றம் போன்ற விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர். பேரணிக்கான பாதுகாப்பினை B-2 காவல்நிலைய காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. பாலச்சந்திரன் மற்றும் காவலர்களும் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலர் திரு. இளங்கோவன் அவர்களும் வழங்கினர்.

விழா ஏற்பாட்டினை பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். க. குமுதா, திட்ட அலுவலர்கள் வினோத், சுகன்யா, கவிதா, லதா மற்றும் தங்க ஹேமாவதி ஆகியோர் செய்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்